சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.

I.A.No.

MCOP.NO.113/2014

I.A.No.

HMOP.NO.

வாதி / பிரதிவாதி ம.சா.4 வது சாட்சி உதவியாளர் திரு.சுப்பிரமணியன் அவர்களால் 44/1969 பிரிவின்படி 13.12.2019 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :முத்துலெட்சுமி | கிராமம் | :சிவபுரி |
| த/பெ | :பிச்சைபிள்ளை | தாலூக்கா | :சிதம்பரம் |
| மதம் | :இந்து | தொழில் | :சித்தாள் |
| ஜாதி | :பறையர் | வயது | :42 |

மு.வி.

நான் எம்.சி.ஓ.பி.113/2014 மனுவின் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு 4 வது சாட்சியாவேன். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். பிரேதபரிசோதனை அறிக்கை நகல் ம.சா.ஆ.8. வாரிசுசான்றிதழ் ம.சா.ஆ.9. ஆகியவற்றை எனது தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கு.வி.

விபத்து சமயத்தில் நான் அருகில் இல்லை. யாருடைய தவறால் விபத்து நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது. எனது கணவர் பயணம் செய்த வேனில் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட நபர்களைவிட அதிகமான நபர்கள் பயணம் செய்து விபத்து ஏற்பட்டுள்ளது காப்பீடு ஒப்பந்த விதிகள் மீறல் என்றும், அதனால் இந்த 2 எதிர்மனுதாரர் எந்தவித நஷ்டஈடும் கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் தொழில், வயது, வருமானம் ஆகியவற்றை நிரூபிக்கும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள நஷ்ட ஈடு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு குடும்ப அட்டை உள்ளது. அதனை தாக்கல் செய்தால் என் கணவருக்கு 67 வயதுக்கு மேல் தெரிந்துவிடும் என்பதால் நஷ்ட ஈடு பாதிக்கப்படும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடியாகவேண்டுமென்றால் சரியல்ல.

ஒம்/முத்துலெட்சுமி,

ஒம்/C.ஸ்ரீதர்,

சார்பு நீதிபதி,

குளித்தலை.